தூரம்பாடி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

பிறப்பிப்பவர் : திரு.செ.சண்முகம் தலைவர்

அனுமதி எண் : 01 /2022-2023 நாள் :13.07.2023

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு -திருப்பூர் மாவட்டம் மூலனூர் வட்டாரம் - தூரம்பாடி ஊராட்சி - கிராமம் ரீ.ச.எண் 143/C2B,143/C3B -ல் 1.00 ஏக்கர் (அ) 4049 ச.மீ பரப்பளவுள்ள வேலன் நகர் என்ற இடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக

பார்வை : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்4628/2022/தி.மா நாள் 02.12.2022

1. மூலனூர் சார் பதிவாளர் அலுவலக தானப்பத்திர ஆவணம் எண் 328/2022 நாள் 10.02.2022

2. தூரம்பாடி ஊராட்சி தி.மா.எண்:63/19.05.2023

உத்திரவு :-

திருப்பூர் மாவட்டம் மூலனூர் வட்டாரம் தூரம்பாடி ஊராட்சி கிராமம் ரீ.ச.எண் 143/C2B,143/C3B -ல் 1.00 ஏக்கர் (அ)4049 ச.மீ பரப்பளவுள்ள் C. துரைராஜ் & N. நல்லமுத்து அவர்களுக்கு சொந்தமான வேலன் நகர் என்ற இடத்தில் குடியிருப்பு மனைகள் அமைத்துக்கொள்ள பார்வை 1-ல் காணும் திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்கள் நிபந்தனைகளுடன் கூடிய தொழில்நுட்ப அனுமதியின்படி கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை மற்றும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) திருப்பூர் மண்டலம் அவர்களின் பார்வையில் காணும் மனைப்பிரிவு வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.
2. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகிக்க கூடாது.
3. மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுதிக்கப்பட்ட கட்டணம் தவிர ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்படவேண்டுமென அறிவித்தாலும்,கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அடிப்படை வசதிகளில் ஏதும் மாற்றம் இருந்தாலும் அதற்கான தொகை அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்.
4. மனைப்பிரிவில் அமையும் மனைகள் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இவ்வூராட்சியில் அனுமதி பெற்று கட்டப்படவும்,கட்டிடப்பணி முடிவுற்றவுடன் வீட்டு வரி செலுத்தவும் வேண்டும்.
5. மனைப்பிரிவில் அமைக்கப்படும் ஒவ்வொரு கட்டிடத்திலும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்.
6. மத்திய மாநில அரசின் இதர துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவர்.
7. மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு அங்கீகரித்த தீர்மானம் எண் நாள் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/எவ்வித விடுதலுமின்றி மனைப்பிரிவு நுழை வாயிலில் 6'*4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்பட வேண்டும்.

8. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது.
9. வரைபடம் அங்கீகாரம் 1994-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக மற்றும் நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.
10. மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.
11. பார்வை 1 ல் கண்ட கடிதத்தின் படியும் பார்வை 1 ல் கண்ட அரசாணையின் படியும் மனுதாரர் SCRUTINY FEES 04/02/2023 தேதியில் ரூ.6074/-ம், CENTAGE CHARGES 05/05/2023 தேதியில்ரூ.4500/- வங்கியில் ஆன்லைன் மூலமும் டிமாண்ட் டிராப்ட் மூலமும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருப்பூர் அவர்கள் மூலமாக செலுத்தப்பட்டது.
12. நில உபயோக மாற்றத்திற்கான ரூ.2,02,000 தொகை சந்தை மதிப்பில் 3% ரூ6060 /- செலான் எண் 566208 நாள் 12.07.2023 -ன்படி உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.
13. விண்ணப்பக் கட்டணம் ரூ 1000/- பல்வகை இரசீது எண் 6316 நாள்12.07.2023 ன்படியும் மற்றும் கூறாய்வுக்கட்டணம் ரூ 1000/- வீதம் ஊராட்சி நிதி கணக்கு எண்-1468101007870 ல் பல்வகை இரசீது எண் 6317 நாள் 12.07.2023 ன்படி தொகை செலுத்தப்பட்டுள்ளது
14. பார்வை 1 -ல் காணும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்

இதன் நகல் வீட்டு மனை வாங்குபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

15. மேலே கண்ட நிபந்தனைகளில் எவையேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டாலோ,அல்லது நாளது தேதியில் வழக்குகள் நடைபெற்று வருவதாக பின்னர் தெரிய வந்தாலோ வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கான அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

S.சண்முகம்
தலைவர்
தூரம்பாடி ஊராட்சி
தூரம்பாடிஊராட்சி

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடம் 1

மனைப்பிரிவு நிபந்தனைகள் 1

பெறுநர்:

நகல் : 1. நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர் (பொ) திருப்பூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. மூலனூர் ,சார்பதிவாளர் அலுவலகம்
4. வட்டார வளர்ச்சி அலுவலர், மூலனூர்.

பலவகை வரவு ரசீது

அசல்

No. 6317

ஊராட்சி படிவம் எண். 6

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஊராட்சி

புத்தக எண்.

பற்றுச் சீட்டு எண்.

..... ஊராட்சி

நாள் : 12.07.2023

திரு. C. தங்கராஜ் M.N. நல்லிகிராமம் ..... அவர்களிடமிருந்து

ரூபாய் ..... (ரூபாய் ..... மட்டும்)

..... வகைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

M L

பணம் செலுத்துபவரின் கையொப்பம்

ஊராட்சி செயலாளர்

வரி வசூலிப்பவர்

ஊராட்சி தலைவர்

குறிப்பு : 1. இந்தப் பற்றுச்சீட்டு ஊராட்சித் தலைவரின் *Facismile* - யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால்தான் செல்லுபடியாகும்

2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும் இடது கை பெருவிரல் ரேகை மற்றும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்

திருப்பூர் மாவட்டம்
திருமுருகன்பூண்டி
ஊராட்சி

பலவகை வரவு ரசீது

No. 6316

அசல்

ஊராட்சி படிவம் எண். 6

புத்தக எண்.

பற்றுச் சீட்டு எண்.

திருமுருகன்பூண்டி ஊராட்சி நாள் : 12.07.2021

திரு. S. நாகராஜ் P.N. நல்லூர் கிராமம் நல்லூர் அவர்களிடமிருந்து

ரூபாய் 6000/- (ரூபாய் ஆயிரத்து அறுநூறு மட்டும்)

வணிகவரித் துறைக்கு வாடகை வகைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

பணம் செலுத்துபவரின் கையொப்பம்

வரி வசூலிப்பவர் ஊராட்சி செயலாளர் திருமுருகன்பூண்டி

ஊராட்சித் தலைவர்

குறிப்பு : 1. இந்தப் பற்றுச்சீட்டு ஊராட்சித் தலைவரின் *Facismile* - யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால்தான் செல்லுபடியாகும்

2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும் இடது கை பெருவிரல் ரேகை மற்றும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்